**மாதிரி வினாத்தாள் -2016-17**

**MODEL QUESTION PAPER -2016-17**

**SUMMATIVE ASSESSMENT - II**

| | |
|---|---|
| **பத்தாம் வகுப்பு** | **மொத்த மதிப்பெண்கள் :90** |
| **X–STD** | **Maximum marks: 90** |
| **தமிழ்** | **கால அளவு: மணி** |
| **TAMIL** | **Time Allowed: 3 hours** |

…………………………………………………………………………………………

**பகுதி –அ (Section:A ) படித்தல் (Reading)**

**15 Marks ( 15 மதிப்பெண்கள் )**

**(1 ) பின்வரும் பகுதியைப் படித்துக் கொடுக்கப்பட்ட பலவுள் தெரிவு வினாக்களுக்கு ஏற்ற விடை எழுதுக.** **5**

80 மில்லியன் ஆண்டு பழமையான மேற்கு தொடர்ச்சி மலையை, உலகின் பாரம்பரியமிக்க இடமாக யுனெஸ்கோ 2012 ஆம் ஆண்டு அறிவித்தது.7,402 பூக்கும் தாவரங்கள், 1,814 பூக்காத தாவரங்கள், மூலிகைச்செடிகள், 10 வகை காட்டுத் தேனீக்கள், 6,000 பூச்சிகள், 508 பறவையினங்கள், 179 நீர், நில வாழ்வன, 288 மீன் வகைகள், பல்வகை வனவளம், கனிமவளம், மேற்கு தொடர்ச்சி மலையில் கொட்டிக் கிடக்கின்றன. 14 தேசிய பூங்காக்கள், 44 வன உயிரின சரணாலயங்கள், 11 புலிகள் காப்பகங்கள் உள்ளன. இந்தியாவிலேயே மேற்கு தொடர்ச்சி மலையில்தான் அதிகளவு யானைகள் உள்ளன. இதுதவிர, புலி, சிறுத்தை, ஆடு உள்ளிட்ட 139 வகை பாலூட்டி விலங்குகள் உள்ளன. 35 சிகரங்கள் உள்ளன.

முற்காலத்தில் மேற்கு தொடர்ச்சி மலைகள் தற்போதைய ஆப்பிரிக்கா, மடகாஸ்கர் மற்றும் செசல்சு தீவுகளோடு இணைந்திருந்துள்ளன. 150 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் நடைபெற்ற புவியியல் மாற்றத்தால் அந்த நிலப்பரப்புகளில் இருந்து பிரிந்து தென்னிந்திய பகுதிகள் ஆசிய கண்டத்தை நோக்கி இடம்பெயர்ந்தது. 80 மில்லியன் ஆண்டுகளுக்கு முன் தென்னிந்திய பகுதிகளில் ஏற்பட்ட எரிமலை வெடிப்பு உருவாக்கிய புவியியல் அமைப்பே மேற்கு தொடர்ச்சி மலையாகக் கருதப்படுகிறது.

I. மேற்கு தொடர்ச்சி மலையை, உலகின் பாரம்பரியம் மிக்க இடமாக யுனெஸ்கோ அறிவித்த ஆண்டு

அ) 2002 ஆ) 2012 இ) 2022 ஈ) 1902

II. மேற்கு தொடர்ச்சி மலையில் உள்ள பறவையினங்கள்

அ) 44 ஆ) 508 இ) 179 ஈ) 558

III. மேற்கு தொடர்ச்சி மலை ......................ஆண்டு பழமையானது.

அ)150 பில்லியன். ஆ) 80 பில்லியன் இ) 150 மில்லியன் ஈ) 80 மில்லியன்

IV. மேற்கு தொடர்ச்சி மலையோடு இணைந்திருந்தவை

அ) மடகாஸ்கர் மற்றும் செசல்சு தீவு ஆ) மடகாஸ்கர் மற்றும் அமெரிக்கா இ) ஆப்பிரிக்கா, மடகாஸ்கர் மற்றும் செசல்சு தீவு

ஈ ஆப்பிரிக்கா செசல்சு தீவு

v. இந்தியாவிலேயே அதிகளவு யானைகள் உள்ள இடம்

அ) தமிழகம் ஆ) கேரளா இ ) மேற்கு தொடர்ச்சி மலை

ஈ )கர்நாடகா

**2. <u>பின்வரும் பகுதியைப் படித்து,கொடுக்கப்பட்ட வினாக்களுக்கேற்ற விடை எழுதுக</u>. (5)**

தன் நிறத்தையோ,வடிவத்தையோ சூல்நிலைக்கேற்ப மாற்றிக்கொள்பவை பச்சோந்திகள். சுறாமீனும்,குதிரைக்கால் நண்டும் தங்கள் உடல்களில் மிகச்சில சிறிய மாற்றங்களுடன் டைனோசர்கள் காலத்திலிருந்தே இருந்து வருகின்றன. இன்னும் தொடர்ந்து வாழ்கின்றன. மிருகங்களில் சில நீரிலும், நிலத்திலும் வாழ வல்லவை. அவ்வகையில் தவளைகள் நியூட்ஸ்,சாலமண்டர்கள் மற்றும் கேசிலியன்ஸ் ஆகியவை அடங்கும்

இவை முட்டைப்புழு பருவத்தில் நீரில் இருக்கும் பொழுது அதற்கேற்றாற்போல் சுவாசிக்கும், பின்னர் முழு வளர்ச்சி அடைந்தவுடன் நிலத்தில் நுரையீரலினால் சுவாசிக்கும் திறன் பெற்று இருப்பதால் மற்ற வகை விலங்குகளிலிருந்து வேறுபடுகின்றன. டுவாரா என்னும் நியூசிலாந்தை சேர்ந்த பல்லி போன்ற பிராணி டைனோசர் காலத்தைச் சேர்ந்தது. அதுபோல் மட்ஸ்கிப்பர்கள் தங்களது முன் பக்கத்துடுப்புகளை மென்மையான வழுக்கும் சேற்றில் நடக்க கால்களாய்ப் பயன்படுத்துகின்றன.

**<u>வினாக்கள் :-</u>**

I . கேசிலியன்ஸ் முட்டைப்புழு பருவத்தில் எங்கிருக்கும்?

அ) நிலத்தில் ஆ) நீரில் இ) வான்வெளியில் ஈ) பாறையில்

ii. நிறத்தையோ, வடிவத்தையோ சூல்நிலைக்கேற்ப மாற்றி கொள்பவை

அ) பச்சோந்தி ஆ) பல்லி இ) நியூட்ஸ் ஈ) மண்புழு

Iii. டுவாரா என்பது

அ) கரப்பான்பூச்சி ஆ) மீன் இ) தவளை ஈ) பல்லி போன்ற பிராணி

Iv .டுவாரா எந்நாட்டைச் சார்ந்தது?

அ) பிரேசில் ஆ) இத்தாலி இ) நியூசிலாந்து ஈ) இந்தியா

V .முன்பக்கத்துடுப்புகளைக் கால்களாகப் பயன்படுத்துவது

அ) மட்ஸ்கிட்பரி ஆ) டுவாரா இ) டைனோசர் ஈ) நியூட்ஸ்

**3. பின்வரும் பகுதியைப் படித்து, கொடுக்கப்பட்ட வினாக்களுக்கேற்ற விடை எழுதுக.** (5)

இந்திய ஆய்வாளர்களுள் சி.வி.இராமன்,ஜெகதீச சந்திர போஸ்,ஹோமி பாபா, ,சந்திரசேகர்,அப்துல் கலாம் முதலியோர் குறிப்பிடத் தக்கவர்கள் .இவர்களுள்1930-ஆம் ஆண்டு இயற்பியலுக்கான நோபல் பரிசை வென்றவர் சி.வி. இராமன். இந்தியாவில் பிறந்து, இந்தியாவில் மட்டுமே படித்து, இந்தியாவிலேயே தன் அனைத்து ஆராய்ச்சிகளையும் செய்து, இந்த உயரிய பரிசைப் பெற்றவர் இவர் ஒருவரே.பெங்களூருவில் உள்ள, இன்று இந்தியன் இன்ஸ்டிட்யூட் ஆஃப் சயின்ஸ் எனப்படும் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தை டாடா நிதி உதவியுடன் உருவாக்குவதில் இராமன் பெரும் பங்கு வகித்தார்..1934 முதல் 1948 வரை அங்கு இயக்குநராகப் பணியாற்றிய ராமன், பின்னர் தன் சொந்தப் பணத்தில் பெங்களூருவில் ராமன் ரிசர்ச் இன்ஸ்டிட்யூட் என்ற ஆராய்ச்சி அமைப்பை ஏற்படுத்தி, அதில் தன் இறுதிக் காலம் வரை பணியாற்றினார்.

கடல் ஏன் நீல நிறத்தில் உள்ளது என்பதை ஆராய எடுத்துக்கொண்டார் இராமன் . குறிப்பிட்ட அலைநீளம் கொண்ட ஒளித்துகள்கள் ஒரு பொருள்மீது மோதும்போது , பொதுவாக அதே அலைநீளம் கொண்ட ஒளித்துகள்கள்தான் வெளியே தெறிக்கும் . ஆனால் மிகக் குறைவான அளவுக்கு வேறு அலை நீளம் கொண்ட ஒளித்துகள்களும் தெறிக்கின்றன . இதற்கான காரணத்தை விளக்கும் ராமனின் ஆராய்ச்சிக்குத்தான் நோபல் பரிசு கிடைத்தது .இராமன் ஸ்பெக்ட்ராமீட்டர் எனப்படும் கருவியைக் கொண்டு ஒருவர் என்ன பொருளை மறைத்து எடுத்துச் செல்கிறார் என்பதைத் துல்லியமாகச் சொல்லிவிடலாம். விமான நிலையங்களில் போதை மருந்துக் கடத்தலைத் தடுக்க இக்கருவி பெரிதும் பயன்படுகிறது.

இராமன், இந்திய இசைக்கருவிகள் குறித்தும் நிறைய ஆராய்ச்சிகளைச் செய்தார் . உலகின் அனைத்து தாள வாத்தியங்களிலும் மிருதங்கம், தபேலா ஆகிய இரண்டு மட்டுமே இசைவலைகளை (ஹார்மோனிக்ஸ்) உற்பத்தி செய்யக்கூடியவை என்று அவர் கண்டுபிடித்தார்.

I. இந்தியன் இன்ஸ்டிட்யூட் ஆஃப் சயின்ஸ் அமைந்துள்ள இடம்
அ ) சென்னை ஆ ) பெங்களூரு இ ) டில்லி ஈ ) கல்கத்தா

II. சி.வி. இராமன்.நோபல் பரிசை வென்ற துறை
அ)வேதியல் ஆ)இயற்பியல் இ) விண்ணியல் ஈ)பொருளியல்

III. இந்த இரண்டு மட்டுமே இசைவலைகளை உற்பத்தி செய்யக்கூடியவை
அ)மிருதங்கம், தபேலா ஆ, தபேலா,ஆர்மோனியம்
இ) மிருதங்கம்,,கஞ்சிரா ஈ)மிருதங்கம்,தவில்

IV. தன் சொந்தப் பணத்தில் பெங்களூருவில் ராமன் உருவாக்கியஆராய்ச்சி அமைப்பு

அ) இந்தியன் இன்ஸ்டிட்யூட் ஆஃப் சயின்ஸ்
ஆ) டாடா இன்ஸ்டிட்யூட் இ) ராமன் ரிசர்ச் இன்ஸ்டிட்யூட்
ஈ) இராமன் ஸ்பெக்ட்ராமீட்டர்

V. இந்தியாவிலேயே தன் அனைத்து ஆராய்ச்சிகளையும் செய்து, நோபல்பரிசைப் பெற்றவர்
,அ) சந்திர போஸ், ஆ) ஹோமி பாபா, ,இ) ,அப்துல் கலாம் )
ஈ சி.வி.இராமன்

**பகுதி - ஆ (Section:A ) எழுதுதல் (Writing)**
**20 மதிப்பெண்கள் (20 Marks )**

4 .நீ வாழும் பகுதியில் காவல் நிலையம் அமைத்துத் தருமாறு காவல்துறை தலைவர்க்குக் கடிதம் எழுதுக 8
.

**அல்லது**

உடற்பயிற்சியால் உன் கல்வியும் உடலும் மேம்படும் என அயலூர் நண்பனுக்குக் கடிதம் எழுதுக.

[எக்கடிதமாயினும் உனது முகவரி: அ.மலரவன் / அ.மாதினியாள்
15. மணிமேகலை தெரு, பாடி, சென்னை-40. எனக்கொள்க]

5. **பின்வருவனவற்றுள் எதேனும் ஒரு பகுதியின் குறிப்புகளைக் கொண்டு கட்டுரை ஒன்று எழுதுக**. **8**

அ. முன்னுரை –நீரின்றி அமையாது உலகு – ஐம்பூதங்களில் முதன்மையானது -மூன்றாம் உலகப்போர் வந்தால் நீரே காரணமாகும் - வீணாகும் நீர்வளம் .- சேமிக்கும் வழிகள் - முடிவுரை.

ஆ பெருகி வரும் போக்குவரத்துக் கருவிகள்- சாலைவிதிகள் – விதிமீறல்கள்- வேகமும் சோகமும்- தேவை கடும் விதிகள்-விபத்தில்லாப் பயணம்- முடிவுரை

இ. முன்னுரை -மரங்களின் தேவை - காடுகள் -காட்டின் வகைகள் -பயன் - காடுகளின் அழிவு- மரம் வளர்ப்போம்- முடிவுரை..

**6. புகையிலைப் பயன்பாட்டின் கேடு பற்றி நடந்த விழிப்புணர்வு ஊர்வலம் குறித்து அறிக்கை எழுதுக. ( 4 )**

**[ அல்லது ]**

**முதியோர் நோய் கண்டறியும் மருத்துவ முகாம் பற்றி அறிக்கை வரைக.**

## பகுதி - இ (Section:C) இலக்கணம் ( Grammar )

**15 மதிப்பெண்கள் ( 15 Marks )**

**7 சான்று தருக. ( மூன்றனுக்கு மட்டும் )** ( 3 )

I. . தோன்றல் விகாரப் புணர்ச்சி

அ. மலைப்பழம் ஆ சொற்போர் இ. தமிழ் மொழி ஈ.மலைவாழை.

II. நெய்தல் நில விலங்குகள்.

அ. முயல் மான் ஆ. முதலை சுறா இ. புலி கரடி ஈ. எருமை நீர் நாய்.

III. . கருவிளம்

அ .கசடற ஆ.கற்க இ.கற்பவை ஈ. விளக்கு

IV. குற்றியலுகரப் புணர்ச்சி

அ .வளநாடு ஆ. சோழநாடு ஆ.கதவடைப்பு ஈ. வயிற்றுப் பசி

V. வஞ்சப்புகழ்ச்சியணி

அ. உள்ளம் உடைமை உடைமை ஆ தேவர் அனையர் கயவர்

இ. ஏற்றுமின் விளக்கை ஈ. நெடும் புனலுள் வெல்லும் முதலை.

**8. நிரப்புக. ( மூன்றனுக்கு மட்டும் )** (3 )

I. மருதநிலம் என்பது __________.

அ. வயலும் வயல் சார்ந்த இடமும் ஆ. மலையும் மலை சார்ந்த இடமும்

இ. கடலும் கடல் சார்ந்த இடமும் ஈ. காடும்காடு சார்ந்த இடமும்

II. .திணை என்பதற்கு _______ என்பது பொருள்.

அ. ஒரு தானியம் ஆ.திண்ணை இ. மாதம் ஈ. நிலம்

III. வெட்சி நிரை கவர்தல் என்பதில் உள்ள நிரை என்பதன் பொருள் __________

அ .பசு ஆ. பசுக்கூட்டம் இ.கூட்டம் ஈ. வரிசை

IV. ஈற்றயலடி முச்சீராய் வருவது _________ .

அ. நேரிசை .ஆசிரியப்பா ஆ. நிலை மண்டில ஆசிரியப்பா

இ. இணைக்குறள் ஆசிரியப்பா ஈ. அடிமறி மண்டில ஆசிரியப்பா

V. அன்பு கலந்த அகத்திணை _______ வகைப்படும் .

அ. ஏழு ஆ.பன்னிரண்டு இ. நான்கு ஈ. ஐந்து

**9. கூறியவாறு செய்க ( மூன்றனுக்கு மட்டும் )** (3)

I. நெட்டெழுத்து (புணர்ச்சி விதியினைக்கூறு )

அ. இனமிகல் ஆ. ஆதிநீடல் இ. தன்னொற்றிரட்டல்

ஈ. அடி அகரம் ஐயாதல்.

II. துப்பாக்கி (அசை பிரித்து வாய்பாடு கூறு )

அ. நிரை நேர் நேர் - புளிமாங்காய் ஆ. நேர் நேர் நேர் -தேமாங்காய்

இ. நிரை நிரை நேர் - கருவிளங்காய் ஈ. நேர் நிரை நேர் -கூவிளங்காய்

III. பாலை (சரியானதைப் பொருத்துக.)

அ. ஏறு தழுவல் ஆ.களை எடுத்தல் இ.கிழங்கு அகழ்தல்

ஈ. வழிப்பறி செய்தல்

IV. சிறுமை+ஓடை ( சேர்த்து எழுதுக )

அ. சிறு ஓடை ஆ .சிறுமை ஓடை இ .சிற்றோடை ஈ . சித்தோடை

V. . இலை ( அளவுப்பண்புப் பெயர் சேர்த்து எழுதுக )

அ. வெற்றிலை ஆ. கற்றிலை இ. பாசிலை ஈ. சிற்றிலை

**10. <u>சரியான தொடரைத் தேர்வு செய்க ( மூன்று மட்டும் )</u>** (3)

I. அ. கற்சிலை என்பது தோன்றல் விகாரம்.
ஆ கற்சிலை என்பது திரிதல் விகாரம்.
இ கற்சிலை என்பது கெடுதல் விகாரம்.
ஈ கற்சிலை என்பது இயல்புப் புணர்ச்சி.

II. அ. பிற்பகல் 2 மணி முதல் 6 மணி வரை மாலை
ஆ.. பிற்பகல் 2 மணி முதல் 6 மணி வரை எற்பாடு
இ . பிற்பகல் 2 மணி முதல் 6 மணி வரை நண்பகல்
ஈ. பிற்பகல் 2 மணி முதல் 6 மணி வரை இரவு

III. அ. அதிரப் பொருதல் வாகை.
ஆ.. அதிரப் பொருதல் கரந்தை
இ அதிரப் பொருதல் தும்பை.
ஈ. அதிரப் பொருதல் வெட்சி

IV. அ. ஈற்றடி முச்சீராய் ஏனைய அடிகள் நாற்சீராய் வருவது வெண்பா
ஆ.ஈற்றடி முச்சீராய் ஏனைய அடிகள் நாற்சீராய் வருவது ஆசிரியப்பா..
இ ஈற்றடி முச்சீராய் ஏனைய அடிகள் நாற்சீராய் வருவது.வஞ்சிப்பா .
ஈ ஈற்றடி முச்சீராய் ஏனைய அடிகள் நாற்சீராய் வருவது கலிப்பா

V. அ .செய்யுளை அழகு படுத்த வருவது சொல் இலக்கணம்
ஆ. செய்யுளை அழகு படுத்த வருவது பொருள் இலக்கணம் ..
இ. . செய்யுளை அழகு படுத்த வருவது அணி இலக்கணம்
ஈ. . செய்யுளை அழகு படுத்த வருவது யாப்பு இலக்கணம்

**11. <u>இலக்கணக் குறிப்பு எழுதுக. ( மூன்றனுக்கு மட்டும் )</u>** (3)

I. துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉம் மழை.
அ. ஒரு விகற்பக் குறள்வெண்பா ஆ. பல விகற்பக் குறள்வெண்பா
இ. இரு விகற்பக் குறள்வெண்பா ஈ. சிந்தியல் வெண்பா

II. மூன்று அடிகளால் அமையும் வெண் பா
அ. இன்னிசை வெண்பா. ஆ. குறள் வெண்பா.
இ. நேரிசை வெண்பா ஈ. சிந்தியல் வெண்பா

III. கருப்பொருள்
அ. நிலமும் பொழுதும் ஆ.விளையும் பொருள்
இ மக்கள் முதலியோர் ஈ. சிறுபொழுது

IV. தென் இந்தியா

அ.திசையோடு திசை சேர்ந்த புணர்ச்சி ஆ. திசையோடு பிற சேர்ந்த புணர்ச்சி இ.பிறவற்றோடு திசை சேர்ந்த புணர்ச்சி

ஈ. எதுவும் பொருந்தவில்லை

V. அகத்திணையிலும் புறத்திணையிலும் இடம் பெறுவன

அ. கைக்கிளை ஆ. பெருந்திணை

இ. கைக்கிளையும் பெருந்திணையும் ஈ.எதுவுமில்லை

**பகுதி - ஈ இலக்கியம் (Literature/Text Books)**

**40 மதிப்பெண்கள் (40 Marks)**

**12. பின்வரும் உரைநடைப் பகுதியைப் படித்து வினாக்களுக்கேற்ற விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** (5)

முன்னிரவு நேரம்,சென்னை நகரத்து இலிங்கிச் செட்டித்தெருவில்புராணத் தொடர் சொற்பொழிவைக் கேட்க மக்கள் கூட்டம் ஆர்வத்துடன் திரண்டிருந்த்து.அன்று வரவேண்டிய சொற்பொழிவாளர் வரவில்லை ஆனால் வந்தவரோ வெள்ளாடை அணிந்து அழகொழுகும் திருமுகத்துடன் கூடிய ஒன்பது வயதுச் சிறுவர்.அச்சிறுவர் அனைவரையும் வணங்கித் தம் அண்ணன் வர இயலாமையைக் கூறி உலகெலாம் உணர்ந்து ஓதற்கரியவன் என்ற பெரிய புராணப் பாடலைப் பாடினார்.அனைவரது கருத்தையும் கவரும் வண்ணம் நெடுநேரம் அதற்குப் பொருள் கூறினார்.

யாவரும் வியக்கும் வண்ணம் அன்று உரை நிகழ்த்தியவர்தான் பிற்காலத்தில் சாதிகளிலும் மதங்களிலும் சமயச் சடங்குகளிலும் உழன்று கொண்டிருந்த மக்களை அவற்றிலிருந்து மீண்டுவர சமரச சுத்த சன்மார்க்கப் பாதை அமைத்த வள்ளலார்.

I. தொடர் சொற்பொழிவைக் கேட்க மக்கள் கூட்டம் யாருக்காகத் திரண்டிருந்தது?

அ . வள்ளலாருக்கு ஆ .இராமலிங்கருக்கு இ . வள்ளலார் அண்ணனுக்கு ஈ .சிறுவனுக்கு

II. வெள்ளாடை அணிந்து வந்த சிறுவனின் வயது

அ .எட்டு ஆ .ஏழு இ .ஒன்பது ஈ .பத்து

III. சிறுவன் முதலில் பாடிய பாடல்

அ . பெரிய புராணப் பாடல் ஆ .கணபதிப் பாடல்

இ .முருகன் பாடல் ஈ .திருமால் பாடல்

IV. புராணத் தொடர் சொற்பொழிவு நடந்த தெரு

அ .சென்னை ஆ. வள்ளலார் தெரு

இ .இலிங்கிச் செட்டித்தெரு ஈ .பாரிமுனை

V. மதங்களிலும் சமயச் சடங்குகளிலும் உழன்று கொண்டிருந்த மக்களை மீண்டுவர வள்ளலார் கண்ட பாதை

அ . சமரச பாதை  ஆ . சன்மார்க்கப் பாதை

இ . சுத்த சன்மார்க்கப் பாதை  ஈ சமரசசுத்த சன்மார்க்கப் பாதை

13. . **பின்வரும் உரைநடைப் பகுதியைப் படித்து வினாக்களுக்கேற்ற விடையைத் தேர்ந்தெடுத்த எழுதுக.** (5)

மணிமேகலையின் தோழி சுதமதியின் தந்தையை மாடு முட்டியதால் அவரின் குடல் சரிந்தது. சரிந்த குடலைப் புத்தத் துறவியர் சரி செய்தனர். இச் செய்தியை மணிமேகலை எடுத்துரைக்கிறது.

திருவாசகத்தில் பல்வேறு அறிவியல் செய்திகள் உயிரியல் செய்திகள், மருத்துவ செய்திகள் விரவிக் கிடக்கின்றன.'புல்லாகிப் பூடாய்.'எனத் தொடங்கும் திருவாசக வரிகள் பல்வகை உயிர்களின் பரிணாம வளர்ச்சியை விரிவாகக் கூறும் மானுடப் பிறப்பினும் மாதா உதரத்து ஈனமில் கிருமி செருவினில் பிழைத்தும் " எனத் தொடரும் பாடலடிகள் கருவியல் அறிவை நன்கு தெரிவிக்கின்றன. .

I. மாடு முட்டியதால் குடல் சரிந்தவர்

அ . மணிமேகலை  ஆ. சுதமதி  இ . சுதமதியின் தந்தை  ஈ மூவரும்

II. அறுவை மருத்துவம் பற்றிக் கூறும் நூல்

அ . மணிமேகலை  ஆ.சிலப்பதிகாரம்  இ .திருவாசகம்  ஈ திருக்குறள்

III. பரிணாம வளர்ச்சியை விரிவாகக் கூறும் வரிகளின் தொடக்கம்

அ . மானுடப் பிறப்பினும்  ஆ .மாதா உதரத்து

இ . ஈனமில் கிருமி  ஈ புல்லாகிப் பூடாய்

IV. திருவாசகத்தில் இந்தச் செய்திகள் உள்ளன

அ . அறிவியல் செய்திகள் ஆ .உயிரியல் செய்திகள்,

இ .மருத்துவ செய்திகள் ஈ .மூன்றும்

V. உதரம் என்ற சொல்லின் பொருள்

அ . உதிர்வது  ஆ .தசை  இ .வயிறு  ஈ .நரம்பு

14. **செய்யுளடி வினாவிற்குரிய விடையைத் தேர்வு செய்து எழுதுக.**

(4 )

" ஆற்றுதல் என்பது அலந்தவர்க்கு உதவுதல்
போற்றுதல் என்பது புணர்ந்தாரைப் பிரியாமை
பண்பெனப் படுவது பாடறிந்து ஒழுகுதல்
அன்பெனப் படுவது தன்கிளை செறாஅமை "

I. இப்பாடலின் ஆசிரியர்

அ. உமறுப்புலவர் ஆ. குலசேகர ஆழ்வார்  இ. நல்லந்துவனார்  ஈ. பாரதியார்

II. .இச்செய்யுள் இடம் பெற்ற நூலின் பெயர் ?

அ. தமிழ் விடு தூது ஆ. கலித்தொகை இ .தேவாரம் ஈ. நந்திக் கலம்பகம்

III. .வருந்தி வந்தவர்க்கு உதவுதல் என்பது

அ. ஆற்றுதல் ஆ போற்றுதல். இ.அன்பு ஈ பண்பு .

IV. கிளை என்பதன் பொருள்

அ.மரக்கிளை ஆ. கீழே இ ,சுற்றம் ஈ. நண்பன்

**15. பின்வரும் உரைநடைவினாக்களில் எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விளக்கமான விடையளி** (10)

I. மண்ணியல், அணுவியல் ஆகியவை பற்றி எழுதுக.
II. எவர் வேலைக்காக காத்திருக்க வேண்டியது இல்லை ? ஏன் ?
III. மனித நேயம் பற்றிக் காந்தியடிகளின் கருத்துகளை விவரி.
IV. வள்ளலார் பாடல்களும் ,அவரது தமிழ்ப்பற்றும் பற்றி விவரி.
V. தொன்மைத் தமிழகம் கூறும் இசைக்கலைக் குறித்து எழுதுக.

**16. எவையேனும் இரண்டு செய்யுள் வினாக்களுக்கு விடையளி** (8)

I. புலி வசனித்த படலக் கருத்துகளைத் தொகுத்திடுக.
II. பெரியாரின் இலக்கணம் ,அவரைத் துணைக்கொள்வதின் சிறப்பு குறித்து எழுதுக.
III. .வித்துவக் கோட்டு இறைவனிடம் ஆழ்வார் வேண்டுவது யாது ?
IV. தமிழ் விடு தூது கூறும் செய்திகளை விவரி.

**17.ஏதேனும் ஒரு தலைப்பில் துணைநூல் கட்டுரை எழுதுக**. (8)

I. நூலகமும் அவற்றின் செயல்பாடுகளும்
II. அதிசய மனிதர் அயோத்தி தாசர்
III. அடித்தளம்- நேர்முக சிந்தனையே வாழ்வின் அடித்தளம்

&&&&&&&&&&&&&&&&&&&&&&&&